

அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் என் உயிரினும் மேலான... பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்களின் கழக கருத்தியல் நிகழ்ச்சியில் முனைவர் பர்வீன் சுல்தானா பங்கேற்று பேசினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமையில் “என் உயிரினும் மேலான” பட்டை தீட்டப்பட்ட

# இளம் பேச்சாளர்களின் கழகக் கருத்தியல் நிகழ்ச்சி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - முனைவர் பர்வின் சுல்தானா - தஞ்சை ஜோ.வியானி விஷ்வா - அ.தா.டெக்சின் ரொமேரியோ சிறப்புரையாற்றினர்!

சென்னை, நவ.4-

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அம்பத்தூர் சட்டமன்ற திமுக சார்பில் ‘என் உயிரினும் மேலான’ பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்களின் கழக கருத்தியல் நிகழ்ச்சி 03.11.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அம்பத்தூர் டெலிபோன் எக்ஸ்சேஞ் அருகில் உள்ள பி.எஸ்.பி கன்வென்ஷன் மஹாலில் (PSB CONVENTION MAHAL) அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும் வடக்குப் பகுதிச் செயலாளருமான ஜோசப் சாமுவேல் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு இந்து சமய அறநிலையத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும், அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளருமான பி.முனியான்டி, த.செ.கு.உறுப்பினர், அம்பத்தூர் 7வது மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி தெற்கு பகுதி கழக செயலாளரும் மாமன்ற துணை தலைவருமான டி.எஸ்.பி. இராஜகோபால் கிழக்கு பகுதி கழக செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் மற்றும் ஜி.சாந்தகுமாரி, ரமேஷ் (எ) நீலகண்டன், எல்.பி.எஃப். மோகன், டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி, ஜெ.பாலமுருகன்

மற்றும் அம்பத்தூர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் க.முரளிபாபு அ.செல்வம் க.கதீஜா, மா.இரமேஷ், வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் வி.ரவீந்திரன், பு.வீரா, வெ.இராதாகிருஷ்ணன் மு.இரகு எம்.கமல் எம்.சி, மாமன்ற உறுப்பினர்கள் க.பொற்கொடி, எஸ்.உமாசந்தானம், உஷா நாகராஜ் ஆகியோரின் முன்னிலையில் அம்பத்தூர் வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் பி.வி.மூர்த்தி, பொன்.நவராஜ் ரவி க.ஜீவா, எஸ்.பி.அரிகிருஷ்ணன் மா.குப்புசாமி, எம்.ஹரிகிருஷ்ணன், எம்.குணசேகரன், ப.மதி ஆ.இரா. அருண் கோ. சேகர் லால் ஆகியோரின் வரவேற்பில் இக்கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தலைமை கழக பேச்சாளர்களான முனைவர் பர்வின் சுல்தானா, திராவிட மாடலே தேசத்தின் தீர்வு - தஞ்சை ஜோ. வியானி விஷ்வா, எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் எப்போதும் வெற்றியைப் படைக்கும் அ.தா. டெக்சின் ரொமேரியோ ஆகியோர் பங்கேற்று பேருரை வழங்கினார்கள்.

மேலும் தெற்கு. கிழக்கு பகுதி சார்ந்த கழக நிர்வாகிகள் நடராஜன், செல்வராஜ், கதிரவன் து.ஜெகநாதன், பி.ஆர்.இளங்கோவன் பா.பொற்செழியன், ராமு, நடராஜன் து.செல்வராஜ் கவிதாசெல்லதுரை, சங்கர் வட்ட கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார் சீனிவாசன் எம்.இ.சேகர் எம்.சி., நா.நெப்போலியன் டீக்கா, சண்முகம், சுந்தர்ராஜன் லோகநாதன் மோகன்குமார் விஜயகுமார் த.வ.லால் மாவட்ட பிரதிநிதிகள் சேதுராமன் பாஷ்கரன், சுரேஸ்பாபு, ஜெயராமன், மதியழகன், சவரிமுத்து, ராஜ்குமார் கோதண்டன், இன்பசேகரன் மற்றும் பாக முகவர்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக அணி நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

அம்பத்தூர் வடக்கு பகுதி 85வது வட்ட கழக செயலாளர் த.கண்ணபிரான் நன்றியுரை வழங்கினார்.

# தாம்பரம் - காட்டாங்கொளத்தூர் இடையே சிறப்பு ரெயில்கள் இயக்கம்!

சென்னை, நவ.4–

சென்னை, தெற்கு ரெயில்வே சென்னை கோட்டம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தீபாவளி பண்டிகையை கொண்டாட சொந்த ஊர்களுக்கு சென்று விட்டு சென்னை திரும்பும் பயணிகளின் வசதிக்காக சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்படுகிறது.

அதன்படி, காட்டாங்கொளத்தூரில் இருந்து இன்று (திங்கட்கிழமை) அதிகாலை 4, 4.30, 5, 5.45, 6.20 ஆகிய நேரங்களில் தாம்பரத்திற்கு சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்படுகிறது. இந்த ரெயில் பொத்தேரி, கூடுவாஞ்சேரி, ஊரப்பாக்கம், வண்டலூர் ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும்.

அதே போல, தாம்பரத்தில் இருந்து அதிகாலை 5.05 மணி மற்றும் 5.40 மணிக்கு காட்டாங்கொளத்தூருக்கு 2 சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளது.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நடுகுத்தகை ஊராட்சி வசந்த நகரில் ஆவடி சட்ட மன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பூங்கா அமைக்கும் பணி நடைபெற்றது. இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பூங்கா அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் டி.தேசிங்கு, வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடேசன், மாவட்ட நிர்வாகிகள் ம.ராஜி, எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், ஜி.விமல்வர்ஷன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமி துணைத்தலைவர் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, பொறியாளர் எம்.மோகன், உதயா, ஜமுனா ரமேஷ், சாந்தகுமாரி, இ.என்.சந்திரன், இ.பிரதீப், பாட்டனி எஸ்.கார்த்திக், யுவராஜ், உள்பட பலர் உள்ளனர்.

கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும்

# பணியாளர்களுக்கு ஓய்வூதியம் : முதல்வருக்கு நன்றி!

## தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை தொ.மு.ச. அறிக்கை!

சென்னை, நவ.4–

தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறை அரசின் பொதுவிநியோகத்திட்டம்உள்ளிட்ட ஓய்நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இத்துறைமூலம் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் அனைத்து வகைப்பணியாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படாமல் இருந்து வந்தநிலையில் தொ.மு.ச. பேரவை உள்ளிட்ட அனைத்து வகை சங்கங்களும் அரசிடம் முறையிட்டு வந்தனர்.

இதனை கனிவுடன் பரிசீலித்த முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அவர்களுக்கும் கருணை ஓய்வூதியம் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

இதன்மூலம் அனைத்து வகைகூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும்,பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் கருணை ஓய்வூதியம் வழங்க உத்திரவிட்ட தமிழ்நாட்டு முதலமைச்சர் திராவிட நாயகன் தளபதி அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களுக்கும், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி.க்கும், அரசின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர்/கூடுதல் தலைமைச் செயலாளர் ஜெ.இராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் முனைவர் என்.சுப்பையன் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும், தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராஜன், பேரவைத் துணைத்தலைவர் இரா.பொன்னுராம் ஆகியோருக்கும், கூட்டுறவுத்துறை மூலம் செயல்பட்டு வரும் அனைத்து தொ.மு.சங்க தொழிலாளர்கள், நிர்வாகிகள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதாக தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொ.மு.சங்கம் மாநில பொதுச்செயலாளர் சு.பத்மநாபன் தெரிவித்துள்ளார்.


